# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
# &
## இந்திய வானிலைத் துறை
## வேளாண் காலநிலை ஆராய்ச்சிமையம், கோவை
## ஈரோடு மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை
## (08.05.2024 முதல் 12.05.2024)

**அறிக்கை எண் 037/2024** **தேதி.07.05.2024**

### மாநிலத்தின் கடந்தவார வானிலை

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 36°செ முதல் 44°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 25°செ முதல் 31°செ ஆகவும், கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேரவெப்பநிலை 23°செ முதல் 29°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 15°செ முதல் 16°செ ஆகவும் பதிவானது. தமிழகத்தில் ஆங்காங்கே பரவலாக மழை பெறப்பட்டது.

### ஈரோடு மாவட்டத்தின் கடந்த வார வானிலை

ஈரோடு 03.05.24 முதல் 06.05.24 வரையிலும் பகல்நேரவெப்பநிலை 38°செ முதல் 39°செ ஆகவும் இரவுநேரவெப்பநிலை 26°C முதல் 28°C ஆகவும் காலைநேர காற்றின் ஈரப்பதம் 66 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 36 சதவிகிதமாகவும் பதிவானது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 9-23 கி.மீ வேகத்தில், பெரும்பாலும் கிழக்குதிசையிலிருந்து தென் கிழக்கு திசைவரை பதிவானது.

**ஈரோடு மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**

| கடந்த வார வானிலை (03.05.2024 முதல் 06.05.2024) | | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு 12.05.2024- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 03/05 | 04/05 | 05/05 | 06/05 | தேதி | நாள்-1 08/05 | நாள்-2 09/05 | நாள்-3 10/05 | நாள்-4 11/05 | நாள்-5 12/05 |
| 0.0 | 0.0 | 4.2 | 1.8 | மழை (மி.மீ) | 6 | 32 | 42 | 4 | 2 |
| 39 | 39 | 39 | 38 | அதிக பட்ச வெப்பநிலை (°செ) | 43 | 41 | 40 | 40 | 40 |
| 28 | 27 | 27 | 26 | குறைந்த பட்ச வெப்பநிலை (°செ) | 25 | 24 | 23 | 23 | 23 |
| 7 | 7 | 5 | 4 | மேக மூட்டம் (ஆக்டா) | 5 | 8 | 6 | 7 | 7 |
| 61 | 66 | 65 | 51 | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 70 | 70 | 70 | 70 | 70 |
| 42 | 46 | 44 | 36 | குறைந்தபட்சகாற்றின் ஈரப்பதம் (%) | 30 | 30 | 30 | 40 | 30 |
| 18 | 9 | 23 | 21 | காற்றின் வேகம் (கி.மீ/மணி) | 8 | 6 | 6 | 8 | 6 |
| 200 | 250 | 230 | 230 | காற்று வீசும் திசை | 270 | 140 | 140 | 110 | 200 |

### எதிர்பார்க்கப்படும் வானிலை ஈரோடு (08.05.2024 முதல் 12.05.2024)

வரும் நாட்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். அடுத்த 5 நாட்களுக்கு மிதமானது முதல் கனமழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்சவெப்பநிலை 40°செ முதல் 43°செ ஆகவும், குறைந்தபட்சவெப்பநிலை 23°செ முதல் 25°செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 70 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 30 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்று மணிக்கு 6-8 கி.மீ வேகத்தில் வீசக்கூடும். காற்று பெரும்பாலும் தென்மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

| ஈரோடு மாவட்டத்தில் உள்ள தொகுதி வாரியாக உள்ளஅடுத்த ஐந்து நாட்களுக்கான மழையளவு | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தேதி | அம்மாபெட் | அந்தியூர் | பவானி | பவானிசாகர் | சென்னிமலை | ஈரோடு | கோபி | கொடுமுடி | மொடக்குறிச்சி | நம்பியூர் | பெருந்துறை | சத்தியமங்கலம் | தாளவாடி | டி.என்.பாளையம் |
| **08-05-2024** | 0.0 | 0.0 | 0.0 | 5.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 2.0 | 1.0 | 1.0 |
| **09-05-2024** | 36.0 | 36.0 | 38.0 | 36.0 | 36.0 | 39.0 | 36.0 | 31.0 | 37.0 | 36.0 | 37.0 | 35.0 | 27.0 | 35.0 |
| **10-05-2024** | 0.0 | 0.0 | 0.0 | 8.0 | 0.0 | 0.0 | 1.0 | 0.0 | 0.0 | 2.0 | 0.0 | 4.0 | 3.0 | 3.0 |
| **11-05-2024** | 3.0 | 3.0 | 2.0 | 7.0 | 2.0 | 1.0 | 3.0 | 3.0 | 2.0 | 3.0 | 2.0 | 5.0 | 3.0 | 4.0 |
| **12-05-2024** | 0.0 | 0.0 | 0.0 | 5.0 | 0.0 | 0.0 | 1.0 | 0.0 | 0.0 | 2.0 | 0.0 | 3.0 | 1.0 | 2.0 |

**வேளாண் அறிவுரைகள்**

| | | |
|---|---|---|
| பொது அறிவுரை | | வரும் நாட்களில் எதிர்பார்க்கப்படும் மழையானது மேற்கு மண்டலத்தில் வெப்பத்தினால் ஏற்பட்டத்தாக்கத்தினை குறைக்கும். காற்றின் வேகமானது மணிக்கு 6 - 14 கி.மீ வரை எதிர்பார்க்கப்படுகிறது.<br>மண் ஈரத்தினை பொறுத்து இறவைப் பயிர்களுக்கு மாலைநேரங்களில் நீர்ப்பாசனம் செய்து பயிர் கழிவு மூடாக்கு இடவும்.<br>மழையினைப்பயன்படுத்தி சரிவுக்கு குறுக்காக மண் புரட்டிபோடும் கலப்பை கொண்டு கோடை உழவினை மேற்கொள்ள அறிவுறுத்தப்படுகின்றனர்.<br>கோடையில் கிணறு மற்றும் ஆழ்துளைக் கிணற்றிலிருந்து எடுக்கப்படும் நீரின் உப்பு அதிகரிக்க வாய்ப்புள்ளது. இந்த உப்புத்தண்ணீரை வயலுக்கு பாய்ச்சும் பொழுது பயிர்களில் குறிப்பாக மரவள்ளி கிழங்கில் அடி இலைகள் அதிக உப்பின் காரணமாக பழுப்பு நிறமாக மாறி காய்ந்துவிடும். இதற்கு கீழ்க்கொடுக்கப்பட்டுள்ள மேலாண்மை உத்திகளை கடைபிடித்து தாக்குதலின் தன்மையை குறைக்கலாம்.<br>• அடிக்கடி நீர் பாய்ச்சி வயலை ஈரமாக வைத்திருப்பதன் மூலம் உப்பு மேலே வராமல் தடுக்கவும்.<br>• காலை மற்றும் மாலை வேளைகளில் மட்டும் நீர் பாசனம் செய்யவும்.<br>• நல்ல தண்ணீரை காலை, மாலை வேளைகளில் இலைகளின் மேல் தெளிக்கவும்.<br>• தொழு உரங்களை இடுவதன் மூலம் உப்பின் தாக்குதலை குறைக்கலாம்.<br>• நல்ல தண்ணீர் கிடைத்தால் தனியாக அல்லது உப்புத் தண்ணீருடன் கலந்து நீர் பசானம் செய்யவும். |

| | | |
|---|---|---|
| கரும்பு | வளர்பருவம் | உள்ளூர் பகுதிகளில் சுழற்காற்று மற்றும் இடியுடன் கூடிய கோடை மழை பொழிய வாய்ப்புள்ளது, எனவே கரும்பில் எதிரெதிர் வரிசைகளை விட்டம் கட்டி காற்றினால் சாயமல் பாதுகாக்கவும். |
| மஞ்சள் | நிலம் தயாரித்தல் | மஞசள் நடுவதற்கு வயல் தயார் செய்ய இதுவே உகந்த காலமாகும். எனவே விவசாயிகள் வயலை உழவு செய்து பண்படுத்தி வைக்கவும். |
| வாழை | வளர்பருவம் | உள்ளூர் பகுதிகளில் சுழற்காற்று மற்றும் இடியுடன் கூடிய கோடை மழை பொழிய வாய்ப்புள்ளது, எனவே **5** மாத வயதுடைய வாழை மரங்களுக்கு முட்டு கொடுக்கவும். |
| தென்னை | | கோடை காலத்தில் பெறப்படும் மழையினை வேர் பகுதியல் சேமிக்கும் வகையில் மரத்தினை சுற்றிலும் பாத்திகளை உள்நோக்கி சாய்வாக ஆழப்படுத்தவும், |
| கால்நடைகள் | | உயர்ந்துவரும் வெப்பநிலை மற்றும் குறைந்து வரும் காற்றின் ஈரப்பதம் காரணமாக கால்நடைகளுக்கு வெப்பஅழுற்சி ஏற்பட வாய்ப்புள்ளதால் கால்நடை மற்றும் கோழிகளுக்கு போதுமான அளவு சுத்தமான குடிநீர் அளிக்கவும்.<br>தொடர்ந்து வறண்ட வானிலையுடன் அதிக வெப்பமும் காணப்படுவதால் கோழி மற்றும் மாடு கொட்டகைகளின் மேல் தண்ணீர் தெளிப்பதன் மூலம் வெப்பத்தின் தாக்குதலை குறைக்கலாம் அல்லது நனைந்த கோணிப்பையை கூடாரத்தின் ஓரங்களில் தொங்கவிடுவதும் ஓரளவிற்கு நன்மை பயக்கும்.<br>முதிய நேரங்களில் இடியுடன் கூடிய கோடை மழைக்கு வாய்ப்புள்ளதால் கால்நடைகளை பாதுகாக்கவும். |

## குறுஞ்செய்தி

- அடுத்த ஐந்து நாட்களுக்கு மிதமான கோடை மழையுடன் சுழற்காற்றும் எதிர்பார்க்கப்படுவதால் விவசாயிகள் தகுந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கையுடன் பொருளாதார சேதத்தை தவிர்க்க அறிவுறுத்தப்படுகிறார்கள்.

**முதன்மைஅலுவலர் (GKMS)**
**வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம்**
**த.நா.வே.ப.கழகம், கோவை**